

தென்காசி தெற்கு மாவட்டம் தென்காசி, கடையநல்லூர்,ஆலங்குளம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன் வரவேற்புரையாற்றினார்.இந்நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர் மண்டலப் பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் பங்கேற்று பல்வேறு ஆலோசனை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.மாநில சட்டத்துறை இணை செயலாளர் ரவிச்சந்திரன்,துணைச் செயலாளர் ராஜா,மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் நவீன், தொகுதி பார்வையாளர்கள் கலைக் கதிரவன்,கணேஷ்குமார் ஆதித்தன், நௌஷாத்,அவைத் தலைவர் சுந்தர மகாலிங்கம்,தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.





விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் ஆலம்பூண்டி ரங்க பூபதிகல்லூரியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் உள்ளிட்ட மருத்துவ சேவைகளை நேரில் சென்று பார்வையிட்டார். உடன் விழுப்புரம் மாவட்ட மருத்துவ இணை இயக்குனர்டாக்டர் லதா,மாவட்ட மருத்துவ அலுவலர் டாக்டர் செந்தில்குமார்,செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜய குமார்,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், ரங்க பூபதி கல்லூரி தலைவர் வழக்கறிஞர் ரங்க பூபதி,செயலாளர் ஸ்ரீபதி, சத்தியமங்கலம் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் யோக பிரியா, உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள், தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

### புயல் வெள்ளம் மழையால் இயற்கை பேரழிவுகளால் மாநிலங்கள் பாதிக்கப்பட்டாலும்

# எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களுக்கு மிகக் குறைந்த நிதியே ஒதுக்கப்படுகிறது!

## பெங்களூரில் காமன் வெல்த் – இந்திய பிராந்திய மாநாட்டில் பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேச்சு!

பெங்களூர், செப். 15 - புயல் வெள்ளம் மழையால் இயற்கை பேரழிவுகளால் மாநிலங்கள் பாதிக்கப்பட்டாலும் எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களுக்கு மிகக் குறைந்த நிதியே ஒதுக்கப்படுகிறது என பெங்களூரில் காமன் வெல்த் - இந்திய பிராந்திய மாநாட்டில் கலந்து கொண்டு பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள்பேசுகையில் குறிப்பிட்டார்.

கர்நாடகா மாநிலம், பெங்களூருவில் நடைபெற்ற 11வது காமன் வெல்த் பாராளுமன்ற சங்கத்தின் இந்திய பிராந்திய மாநாட்டில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு:

கர்நாடக சட்டமன்ற மேலவைத் தலைவர் அவர்களே. கர்நாடக சட்டமன்ற பேரவைத் தலைவர் அவர்களே.

பல்வேறு மாநிலங்களின் சட்டமன்றப் பேரவைத் தலைவர்கள், சட்ட மேலவை தலைவர்கள், துணைத் தலைவர்கள். மக்களவை மற்றும் மாநிலங்களவை செயலாளர்கள். பல்வேறு மாநில சட்டமன்றங்களின் அனைவருக்கும் செயலாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கூட்டத்தில் முதன்முறையாகப் பங்கேற்கும் பல்வேறு காமன் வெல்த் நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்குத் தமிழ்நாடு அரசின் சார்பாக எனது அன்பான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாநாட்டில் பங்கேற்க எனக்கு வாய்ப்பளித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலாவதாக. இந்த மாநாட்டினை சிறப்பாக ஏற்பாடு செய்தமைக்கும். விருந்தோம்பலுக்கும் ஏற்பாட்டாளர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

நாடாளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் நடைபெறும் விவாதங்கள் மக்களின் நலனுக்காகவும். அவர்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் முன்னுரிமைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் அமைய வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

ஒரு கூட்டாட்சி அமைப்பில், மாநில அரசுகள் மக்களுடன் மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டிருப்பதால், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையிலான உறவுகள் சுமுகமாகவும், உறுதியானதாகவும் இருக்க வேண்டும். ”அமைதி, வளம், வளர்ச்சி இந்த மூன்றும் இருந்தால்தான். மாநிலங்கள் சிறப்பாக வளர்ச்சியடையும் என்ற அடிப்படையில்தான் இந்திய அரசமைப்புச் சட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி!**

இராஜமன்னார். சர்க்காரியா. வெங்கடாசலயா மற்றும் பூஞ்ச் குழுக்கள் ஒன்றிய, மாநில அரசுகளின் உறவுகள் ஆரோக்கியமானதாக இருப்பதற்காக பல்வேறு பரிந்துரைகளை வழங்கியுள்ளன. மேலும், மாநிலங்களில் ஆளுநர்களை நியமிக்க வேண்டு மென்றால், மாநில முதலமைச்சர்களின் ஆலோசனைகளை பெற வேண்டுமென்றும் பரிந்துரை செய்யப்பட்டது. இதை ஒரே வரியில் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் ”மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்று தெளிவாகக் குறிப்பிட்டார்.

இந்திய அரசமைப்பின் அட்டவணை 7. பிரிவு 246இல் ஆரம்பத்தில் மாநிலப் பட்டியலில் 66 பொருட்பாடுகள் இருந்தன. கல்வி உள்பட 5 பொருட்பாடுகள் மாநில பட்டியலிருந்து பொது மற்றும் ஒன்றிய பட்டியலுக்கு இந்திய அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங் கள் மூலம் மாற்றப்பட்டுவிட்டன. அண்மைக்காலமாக, இந்திய அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமலேயே நிருவாக ரீதியான அறிவிப்புகள் மூலமாகவும், அரசாணைகள் மூலமாகவும் கனிமவளம், மீன் வளம், கூட்டுறவுச் சங்கங்களுக்கான அதிகாரங்கள் உள்பட பல்வேறு உரிமைகள் மாநில அரசுகளிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளன. இது கூட்டாட்சிக்கு மிகப்பெரிய பின்னடைவாகும்.

**முதல்வரின் போராட்டம்!**

சமீபத்தில்கூட மதுரை மாவட்டம், அரிட்டாப்பட்டியில் கனிம வளங்களை தனியார் நிறுவனம் வெட்டி எடுப்பதற்கான அனுமதியை ஒன்றிய அரசு வழங்கியதால், அப்பகுதியில் பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டபோது அது மாநில அரசுக்குத்தான் நெருக்கடியை கொடுத்தது. அந்த நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் மேற்படி ஒன்றிய அரசின் நடவடிக்கையை எதிர்த்து தீர்மானத்தை நிறை வேற்றும் போது. அந்தப் பகுதியில் சுரங்க நடவடிக்கைகளை அனுமதிக்கப் போவதில்லை என்றும், அதையும் மீறி நடந்தால் தனது பதவியை ராஜினாமா செய்வதாகவும் அறிவித்தார். இருந்தபோதிலும், இப்படிப்பட்ட பாதிப்புகள் குறித்து, சட்டமன்றத்தில் விவாதித்தாலும், முடிவுகள் ஒன்றிய அரசின் கையில் இருப்பதால், அதை விவாதித்தாலும் எந்தப் பயனும் ஏற்படுவதில்லை.



ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு. முதன்முதலாக GST சட்ட முன்வடிவினை அறிமுகம் செய்த போது, இப்போதைய பாரத பிரதமர் அவர்கள், அப்போது, குஜராத் மாநில முதலமைச்சராக பொறுப்பு வகித்த போது ”இது மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிப்பதோடு. மாநில அரசுகளை ஒன்றிய அரசிடம் கையேந்தும் நிலைக்கு கொண்டு செல்லும் என்று அவருடைய 4 கருத்தைத் தெரிவித்தார். அவர் பிரதமராக பொறுப்பேற்றபின் கொண்டுவரப்பட்ட, GSTல், கடந்த 8 ஆண்டுகளாக வரி விதிப்புகள் வசூலிக்கப்பட்டு வந்தநிலையில், தற்போதுதான் அது இரண்டு அடுக்குகளாக மாற்றப்பட்டுள்ளன. இதனால் மாநில அரசின் பங்கு மேலும் குறைந்துவிட்டது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின்போது. சுதந்திர போராட்ட வீரர்கள் ஒரு பாடலைக் குறிப்பிட்டு பாடுவார்கள்.

ஊரான் தோட்டத்திலே.. ஒருத்தன் போட்டான் வெள்ளரிக்காய்.. காசுக்கு இரண்டு விற்கச் சொல்லி... கடிதம் போட்டான் வெள்ளைக்காரன்..

விவசாயிகள் இந்தப் பாடலின் மூலம் தங்கள் துயரத்தை வெளிப்படுத்தினர், வெளிநாட்டினர் தங்கள் கடின உழைப்பால் உற்பத்தி செய்யும் பொருட்களின் மீது அதிகாரம் செலுத்துவதையும், அவர்கள் சொந்தமாக வைத்திருக்கும் உடைமைகளைக் கூட வெளிநாட்டினர் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதையும் கண்டு விவசாயிகள் மிகவும் வேதனை அடைந்தனர்.

**மாநில அரசு என்ன தண்டல்காரர்களா?**

இதேபோல், டெல்லியில் அமர்ந்திருக்கும் ஒன்றிய அரசும். மாநிலங்களின் கருத்தைக் கருத்தில் கொள்ளாமல் பொருட்களின் மீது பல்வேறு வரிகளை விதித்து வருகிறது. GST வரிகளை (50:50) வசூல் செய்யும் தண்டல்காரர்களாக மட்டுமே மாநில அரசுகளை பயன்படுத்தி வருகிறது. 50 சதவிகித வரியைப் பெறும் ஒன்றிய அரசு, மாநில அரசுக்கு தரவேண்டிய, சமகர சிக்ஷா அபியான் (Samagara Shiksha Abhiyan) திட்டத்தின்மூலம் ரூபாய் 2,152 கோடி நிதியை இதுவரை ஒன்றிய அரசு விடுவிக்காமலே உள்ளது. மேலும். தனியார் பள்ளிகளில் ஏழைக் குழந்தைகளுக்கு 25 சதவிகித இடஒதுக்கீட்டிற்கான ஒன்றிய அரசின் பங்களிப்பான 60 சதவிகித நிதியை கடந்த 4 ஆண்டுகளாக ஒதுக்கவில்லை. MGNREA

திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியும் குறைக்கப்பட்டுள்ளது. அதேபோல், புயல் மற்றும் வெள்ளம் போன்ற இயற்கை பேரழிவுகளால் மாநிலங்கள் பாதிக்கப்பட்டாலும், எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களுக்கு மிகக் குறைந்த அளவில் மட்டுமே நிதி விடுவிக்கப்படுகிறது. அரசியல் கருத்து வேறுபாடுகள் எவ்வாறான மோசமான நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும் என்பதை இது விளக்குகிறது.

வருமான வரி, சுங்க வரி, கலால் வரி. சேவைகள் வரி, பெட்ரோலிய செஸ் வரி. உள்ளிட்ட பல்வேறு வரிகள் மூலமாக ஒன்றிய அரசிற்கு வருவாய் வருகிறது. அதில், மிகவும் குறைந்த அளவில் மட்டுமே மாநில அரசுக்கு பங்குத் தொகை வழங்கப்படுகிறது. இந்நிலையில், கல்வி, சுகாதாரம், சாலை வசதி போன்ற பணிகளை மாநில அரசுகள்தான் மேற்கொண்டு வருகின்றன. மேலும், தமிழ்நாட்டில். புதுமைப் பெண் திட்டம். தவப்புதல்வன் திட்டம். கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டம். மகளிருக்கு பேருந்தில் கட்டணமில்லா பயணம். விவசாயிகள் மற்றும் நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம். அனைவருக்கும் 100 யூனிட் இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு முத்தாய்ப்பான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கிராமப்புறங்களில் பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்திலும் ஒன்றிய அரசு 72,000 ரூபாயும். தமிழக அரசு 2,02,000 ரூபாயும். நகர்ப்புறங்களில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் திட்டத்தில், ஒன்றிய அரசு 1.5 இலட்சம் ரூபாயும். தமிழக அரசு 7 இலட்சம் ரூபாயும் வழங்குகிறது. இதிலும், தமிழக அரசுக்கு நிதிச் சுமை ஏற்படுகிறது. ஒன்றிய அரசு எந்தவிதமான நிதிப் பகிர்வையும் ஒழுங்காக மேற்கொள்வதில்லை.

மேலும், ஏழை விவசாயிகள், நெசவாளர்கள். சுய உதவிக் குழுக்கள். மாணவர்கள் மற்றும் குறு. சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் பெற்ற கடன்களுக்கு ஒன்றிய அரசு எந்த சலுகையும் வழங்கவில்லை. மாறாக ஒரு சில செல்வந்தர்களால் நிர்வகிக்கப்படும் கார்ப்பரேட் நிறுவனங்களால் வாங்கப்பட்ட 15 லட்சம் கோடி ரூபாய் வங்கிக் கடன்களை செயல்படாத சொத்துகளாகக் கருதி தள்ளுபடி செய்துள்ளது. இது வருந்தத்தக்கது.

**திராவிட மாடல் வளர்ச்சி!**

இவ்வாறு ஒன்றிய அரசு நிதிப் பகிர்மானத்தில் மாநிலங்களை வஞ்சித்தாலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையின்கீழ், தமிழ்நாடு அரசு 11.19% வளர்ச்சி அடைந்த மாநிலமாக உருவாகியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடந்த 17வது மக்களவையில் (20192024). அறிமுகம் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட சட்டமுன்வடிவுகளுக்கு, மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள், ஒரிரு நாட்களில் ஒப்புதல் அளித்து, சட்டமாக்கப்படுகின்றன. ஆனால், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையை பொறுத்தவரையில், ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட சட்டமுன்வடிவுகள் ஆண்டுக்கணக்கில் காத்திருக்கின்றன. குறிப்பாக, தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நிதி பொறுப்புடைமை திருத்தச் சட்டமுன்வடிவினை ஆளுநர் அவர்கள் சுமார் ஒன்றரை வருடங்களுக்குப் பிறகு சட்டமன்றத்தில் மறுஆய்வு செய்ய சமீபத்தில் அனுப்பியுள்ளார். இதனால், மக்கள் நலத் திட்டங்களுக்கு நிதியொதுக்குவதில் மாநில அரசிற்கு சிரமம் ஏற்பட்டுள்ளது.

சட்டமன்றத்தில் நிறை வேற்றப்பட்ட சட்டமுன்வடிவுகளுக்கு ஆளுநர்கள் ஒப்புதல் அளிப்பதற்கு கால நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்றும். இதற்காக இந்திய அரசமைப்புச் சட்டத்தில், சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும், முதன்முதலில் 2021 ஆம் ஆண்டு சிம்லாவில் நடைபெற்ற அகில இந்திய மாநில பேரவைத் தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு. நான் உரையாற்றினேன். அதேபோன்று,

மும்பை மற்றும் பாட்னாவிலும் நடைபெற்ற மாநாடுகளிலும், இதே கருத்தை மீண்டும் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தினேன்.

**ஆளுநர்களின் அட்டகாசம்!**

தமிழ்நாடு மாநிலங்களவை உறுப்பினரும். மூத்த வழக்கறிஞருமான வில்சன் அவர்கள். மாண்புமிகு ஆளுநர்கள், சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிப்பதற்கு கால நிர்ணயம் செய்ய வேண்டுமென்று, தனிநபர் சட்டமுன்வடிவினை மாநிலங்களவையில் தாக்கல் செய்து. வலியுறுத்தி பேசியுள்ளார். இப்பிரச்சினை தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பு காரணமாக தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த வழக்கில், மேதகு குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநர்களுக்கு கால நிர்ணயம் செய்து உச்ச நீதி மன்றம் வழங்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை மனதார வரவேற்கிறேன். இந்த வரலாற்று தீர்ப்பு தற்போதைய சட்டமாகும்.

ஜெர்மனியில் 16 மாநிலங்கள் உள்ளன. அங்குள்ள மத்திய அரசு மாநில அரசுகளுடன் அதிகாரத்தை சரிசமமாக பகிர்ந்து கொண்டுள்ளது. சாதாரண சாமானியர்களின் வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்பதை ஜெர்மனியின் மத்திய அரசு முடிவு செய்வதில்லை. அந்தந்த மாநில அரசுகள் தான் முடிவு செய்கின்றன.

எனவே. பாரத பிரதமர் அவர்கள் குஜராத் மாநில முதலமைச்சராகப் பொறுப்பு வகித்தபோது. கூறிய கருத்தின் அடிப்படையில், மாநிலங்களுக்கு முழுமையாக நிதி சுயாட்சி வழங்க வேண்டும் அல்லது மாநிலங்களுக்கான ஜி.எஸ்.டி. பங்கை 75 சதவீதமாக உயர்த்த வேண்டும். இதனால் மாநில மக்களுக்கு பயனளிக்கும் கூடுதல் திட்டங்களை செயல்படுத்த முடியும் என்பதை தெரிவித்துக்கொண்டு இத்துடன் எனது உரையை முடிக்கிறேன்.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேசினார்.



விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டத்தில், விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் கலந்து கொண்டு ஓரணியில் தமிழ்நாடு உறுதிமொழி ஏற்பு, பொதுக்கூட்டம் உள்ளிட்டவை குறித்து ஆலோசனைகளை வழங்கினார். இக்கூட்டத்தில் விழுப்புரம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் துரை.கி.சரவணன், வானூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் எஸ்.கே.பி.கருணாநிதி, மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்

# மாநிலச் செயலாளராகத் தேர்வாகியுள்ள மு.வீரபாண்டியனுக்கு வாழ்த்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் தெரிவித்தார்!

சென்னை, செப். 15 - தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதள பதிவு வருமாறு:-

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டுள்ள மு.வீரபாண்டியன் அவர்களுக்கு வாழ்த்துகள்!**

**இயக்கத்தை இதுநாள் வரையில் சிறப்பாக வழிநடத்தி, தோழமை பாராட்டிய தோழர் முத்தரசன் அவர்களுக்கு நன்றி!**

**ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காகப் பாடுபடும் இடதுசாரி அரசியலில் இணைந்து பயணித்து, வெற்றி காண்போம்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள் ளார்.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிளைக்கழக செயலாளர்கள் மற்றும் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில், தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன், கழக கொள்கைபரப்பு துணைச் செயலாளர், தொகுதி பார்வையாளர் ச.அ.பெருநற்கிள்ளி ஆகியோர்கள் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு, வருகின்ற 2026 சட்டமன்றத்தேர்தல் கழக ஆக்கப் பணிகள் குறித்தும், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பிறந்தநாளில் அனைத்து வாக்குச் சாவடிகளிலும் உறுதிமொழி ஏற்பது தொடர்பாகவும், கரூர் மாவட்டத்தில் நடைபெற இருக்கும் கழக முப்பெரும் விழாவில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழகம் சார்பில் அனைவரும் பெரும் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்பது குறித்தும் பல்வேறு ஆலோசனைகளை கழக நிர்வாகிகளுக்கு வழங்கினார்கள், இந்த ஆலோசனைக்கூட்டத்தில், மாநில,மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர்,கழக செயலாளர்கள், ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் என அனைவரும் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மாஸ்டர் தமிழ்ப்பித்தன்
### செப்டம்பர் 15 (2001)



**கழகத்தில் சாதாரண தொண்டராக இருந்து படிப்படியாக உயர்ந்து தி.மு.க. மாநில தொண்டர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்று சிறப்புற பணியாற்றியவர்.**

**2001ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்று சிறந்த தொண்டர் அணியின் விருதினை தலைவர் கலைஞர் அவர்கள் கையால் பதக்கம் பெற்றவர்.**

**தன் உயிரினும் மேலான தலைவர் கலைஞர் திருக்கரத்தால் விருதினைப் பெற்று அளவற்ற மகிழ்ச்சியில் நின்ற மாஸ்டர் தமிழ்ப்பித்தன் அதே இடத்தில் தன்னுயிரை இழந்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**